# குறுந்தொகையில் திணைசார் வாழ்வியல் குறிஞ்சி நிலம்

25

**முனைவர் அர. கண்ணன், உதவிப்பேராசிரியர்,**

**இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி,**

**சூலூர், கோவை** – 641402

**Key words :** நிலவியலும் - ஐந்திணை மக்களும் , **சூழலியல் சார் வாழ்வியல்,** திணைசார் வாழ்வியல் , குறிஞ்சி நில வாழிடச் சூழல், **தொழில்முறை, களைபறித்தல், சூழலியல் சார்ந்த உணவு**

**ஆய்வுச்சுருக்கம்**

நில அமைப்பில் ஐந்நிலப் பாகுபாட்டைத் தமிழர்கள் அறிந்து , அதற்கேற்பத் தங்கள் வாழ்வமைப்பை உருவாக்கிக் கொண்டனர். மக்கள் தாம் வாழும் சூழலியலுக்கு ஏற்ப தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் என்பதைச் சங்க இலக்கியப் பாடல்கள் உணர்த் ;துகின்றன. சங்க இலக்கியத்தில் தனிப்பட்ட முறையில் இயற்கை வருணனை இடம்பெறவில்லை. மாறாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் முதல் , கரு, உரி மூன்றும் அமைய இலக்கியத்தில் மக்களின் வாழ்க்கை முறை சித்திரிக்கப்பட்டுள்ளது. இது பழந்தமிழர் தம் சூழலியல் வாழ்வைக் காட்டுவதாகவும் உள்ளது. மக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும் ; வாழ்வியல் கருவூலமாகவும் திகழ்கிறது. திணை சார்ந்த சூழலியல் வாழ்க்கையை அமைத்துக் ;கொண்டனர். அதற்கு ஏற்பப் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதையும் சங்க இலக்கியப்பாடல்கள் உணர்த்துகி;ன்றன. குறுந்தொகையில் காணலாகும் ஐந்நில மக்களின் சூழலியல் சார்ந்த உணவு , உறைவிடம், தொழில், தெய்வம், பொழுதுபோக்கு, பழக்கவழக்கம், நம்பிக்கைகள் குறித்தான வாழ்வியல் சூழல்களில் குறிஞ்சி நிலத்தை மட்டும் ஆய்வுப் பொருண்மையாகக் கொண்டு "குறுந்தொகையில் திணைசார் வாழ்வியல் - குறிஞ்சி நிலம்;" என்னும் கட்டுரை அமைகிறது.

நில அமைப்பில் ஐந்நிலப் பாகுபாட்டைத் தமிழர்கள் அறிந்து , அதற்கேற்பத் தங்கள் வாழ்வமைப்பை உருவாக்கிக் கொண்டனர். மக்கள் தாம் வாழும் சூழலியலுக்கு ஏற்ப தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் என்பதைச் சங்க இலக்கியப் பாடல்கள் உணர்த் ;துகின்றன. சங்க இலக்கியத்தில் தனிப்பட்ட முறையில் இயற்கை வருணனை இடம்பெறவில்லை. மாறாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் முதல் , கரு, உரி மூன்றும் அமைய இலக்கியத்தில் மக்களின் வாழ்க்கை முறை சித்திரிக்கப்பட்டுள்ளது. இது பழந்தமிழர் தம் சூழலியல் வாழ்வைக் காட்டுவதாகவும் உள்ளது. மக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும் ; வாழ்வியல் கருவூலமாகவும் திகழ்கிறது. திணை சார்ந்த சூழலியல் வாழ்க்கையை அமைத்துக் ;கொண்டனர். அதற்கு ஏற்பப் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதையும் சங்க இலக்கியப்பாடல்கள் உணர்த்துகி;ன்றன. குறுந்தொகையில் காணலாகும் ஐந்நில மக்களின் சூழலியல் சார்ந்த உணவு , உறைவிடம், தொழில், தெய்வம்,

பொழுதுபோக்கு, பழக்கவழக்கம், நம்பிக்கைகள் குறித்தான வாழ்வியல் சூழல்களில் குறிஞ்சி நிலத்தை மட்டும் ஆய்வுப் பொருண்மையாகக் கொண்டு "குறுந்தொகையில் திணைசார் வாழ்வியல் - குறிஞ்சி நிலம்;" என்னும் கட்டுரை அமைகிறது.

நிலவியலும் - ஐந்திணை மக்களும்

மனித வாழ்க்கைக்கு நிலமும் , பொழுதும் இன்றியமையாப் பங்கு வகிக்கின்றன. இதனை அறிந்த தொல்காப்பியர் , அகப்பொருள் இலக்கணத்தில் முதல் , கரு, உரி மூன்றையும் படைத்தார். இம்முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் குறித்து சூழலியலாளர் ச. வேலுமணி எடுத்துரைக்கையில்,

"**மனித வாழ்வின் அடித்தளமான நிலத்தையும் காலத்தையும் இலக்கணம் 'முதற்பொருள்' என்று சுட்டும். முதற்பொருளின் இணைப்பில் உருவாகும் பயிர் வகைகள். விலங்குகள். பறவைகள் போன்றவை யெல்லாம் 'கருப்பொருட்கள்' என வழங்கப்படுகின்றன. கருப்பொருள் கொண்டு நடத்தும் 'வாழ்க்கை நெறி ' 'உரிப்பொருள்' என்று வழங்கப் படுகின்றது**" எனக் குறிப்பிட்டுள்ளார்.

(சங்ககால ஆயர் வாழ்வியல், ப. 10)

இதேபோன்று இயற்கையின் நிலவியல் தன்மைகளை அ.தட்சிணாமூர்த்தி கூறுகையில்,

**"உலகில் பல்வேறு நிலவியற்கூறுகள் இடம்பெறுகின்றன. அதுபோலவே தமிழக நிலப்பரப்பில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலவியற் கூறுகளைக் காண முடிகின்றது. "ஒரு நாட்டின் இயற்கை ' சூழலுக்கும், அதன் இலக்கியத்துக்கும் நெருக்கமான உறவு உண்டு. தமிழிலக்கியத்தில் அடிப்படையானதொரு கூறாக அமைந்துள்ள ஐத்திணைப் பாகுபாடு, வட இந்திய இலக்கியத்தில் காணப்படாமைக்கு நிலவியற்கையே காரணமாகும் ";** ன்கிறார்.

(அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 11)

நிலவியற்கையைப் பொருத்து மக்களின் உணவும் , தொழிலும் இன்னபிற செயல்பாடுகளும் மாறுவதை, இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. குறிஞ்சிக் குறவர்கள் , முல்லை ஆயர்கள் , மருத உழவர்கள், நெய்தல் பரதர்கள் , பாலை மறவர்கள் என நிலவியற்கை மக்களின் வாழ்வியலை அடையாளப்படுத்துகின்றது.

சங்கப் பாடல்களில் நில அறிவும் , உயிரியல் அறிவும் , வரலாற்றறிவும் இடம்பெறுதலை உய்த்துணர முடிகிறது. இதனைச் சூழலியல் அறிஞர்

**"மக்களின் வாழ்க்கைப் பாதையைச் செம்மையாக உணர்வதற்கு வரலாற்றறிவு தேவையாக இருந்தது. அதுபோலவே மலையும், ஆறும், காடும், வயலும், கடலும், மரம், செடி, கொடிகளும், பறவை, விலங்குகளும் மக்கள் வாழ்க்கைக்கு எவ்வாறு பயன்பட்டன அவர்களின் உணர்ச்சிகளை எவ்வெவ்வாறு பயன்படுத்தக் காரணமாக இருந்தன என்பதையும் உணர இலக்கியங்கள் ; துணை செய்தன" எனக் குறிப்பிடுகின்றார்.**

(ச.பொ. சீனிவாசன் சங்க இலக்கியத்தில் அகவுணர்வு உயிரினப் பயன்பாடு ப. 20)

**"உணவு சேகரித்தலும், வேட்டையாடுதலும் முதலில் உலகெங்கும் நிலவிற்று. ஆனால் அதைத் தொடர்ந்து மாறுதல்கள் அந்தந்தச் சூழ்நிலையைப் பொறுத்ததாயிற்று. சில இடங்களில் கால்நடைப் பொருளாதாரத்திற்கும், விவசாயப் பொருளாதாரத்திற்கும் மாறினர். இவற்றின் முன்னேற்றம் இனக்குழு முறை அழிய வழி செய்தன "** என்றும், **"சங்க காலத்திலும் ,சங்க முற்காலத்திலும் இனக்குழு வாழ்க்கை தமிழகத்தில் நிலவி வந்தது"** என்றும்; கா.சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். (சங்ககாலச்சமுதாயம் , ப. 53)

இவ்வாறாக நிலவியலும் , வாழ்வியலும் இலக்கியத்தில் சித்திரிக்கப்படுதலை அறிஞர்களின் கருத்துக்களால் உய்த்துணர முடிகிறது.

**குறுந்தொகையில் சூழலியல் சார் வாழ்வியல்**

சங்ககால மக்கள் இவ்வுலக வாழ்வையே பெரிதாக எண்ணி வாழ்ந்தனர். இவ்வுலகத்தில் இன்புற்று வாழ வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அறநெறியிலே பொருளீட்டி இன்பம் பெற்று வாழ வேண்டும் என்பதே அவர்களது வாழ்வியலுக்கு அடிப்படையாக இருந்தது. மனித சமுதாயம் ஒவ்வொரு நிலையிலும் படிப்படியாக வளர்ச்சி பெற்றுக் காடுகளிலும் , மலைகளிலும் வாழ்ந்து வந்தது. நிலங்களின் இயல்புகளுக்கு ஏற்ப மக்களின் வாழ்க்கை அமைப்பும் மாறுபடுகின்றது. மனிதனது உணவு உடை , உறையுள் தேவைகளும் சூழலியலைப் பயன்படுத்தக் கற்றுத்தந்தன.

"**உணவு தேடும் நிலையில் நாடோடியாக வாழ்ந்த மக்கள் குளம் மற்றும் மழைக்காலங்களி ;ல் சூழலிலிருந்து காத்துக் கொள்ளும் பொருட்டு இயற்கையாக அமைந்த மரப்பொந்துகளையும் , குகைகளையும் தற்காலிகமாகத் தங்கும் இடமாகப் பயன்படுத்தினர். கால்நடை வளர்ப்பும் , ஏரிபுனச் சாகுபடியும் தொடங்கப்பட்டதால், செம்பாதி நாடோடி நிலைக்கு மாற்றமுற்ற மனிதன் தற்காலிகத் தங்குமிடங்களையும் புலம்பெயரும் இடங்களாக அமைத்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இலக்கியங்களில் இவை , இருக்கை, குரம்பை, குடி, மனை இல் , அகம் என்னும் பெயர்களால் சுட்டப்படுகின்றன"** என்கிறார் வீ.மாணிக்கம்.

(தமிழர் வாழ்வியல். ப.288)

இதன்மூலம் சூழலியலுக்கு ஏற்ப மனிதன் கூட்டமாக வாழக் கற்றுக் கொண்டான் என்றும் , சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் பண்பினைப் பெற்றிருந்தனர் என்பதையும் அறியமுடிகிறது.

திணைசார் வாழ்வியல்

மனித சமுதாயம் ஆங்காங்கே இருந்த இயற்கைச் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு தங்களது வாழ்வை அமைத்துக் கொண்டது. அவரவர்கள் வாழ்ந்த நிலத்தின் இயல்பு , அவரவர் பயன்படுத்திய உற்பத்திக் கருவிகள் ஆகியவற்றின் நிலைக்கேற்ப அவரவர் வாழ்வியல் நிலைகளும் வேறுபட்டு அமைந்திருந்ததை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

சங்க இலக்கியங்கள் திணைக்குரிய பொருளான முதற்பொருள் , கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன அமைதல் வேண்டும். உயிர்கள் நிலத்தை ஆதாரமாகக் கொண்டே வாழ்கின்றன. இவ்வாறு உயிர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள நிலமும் , அவ்விடத்துத் தோன்றும் காலமும்

முதற்பொருள் எனலாம். நிலத்தினும் , காலத்தினும் தோன்றும் கருப்பொருள்கள் எனவும் , அவ்வுயிர்களின் ஒழுகலாறுகளை உரிப்பொருள் எனவும் கொள்வர்.

முதல், கரு, உரி என்னும் முப்பொருள்களும் ஒன்றில் ஒன்று முறையே சிறந்து விளங்குகின்றன. முப்பொருள்களும் முறைமையால் சிறந்தன என்பதற்கு,

**“முறைமையாற் சிறத்தலாவது யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் , கருப்பொருளும், உரிப்பொருளும் வரின் முதற்பொருளால் திணையாகும் என்பதும் , முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகும் என்பதும் உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும் என்பதும் ஆம் ” என்று இளம்புரணர் விளக்கமளித்துள்ளார்.**

(தொல். அகத். இளம்பூரணர் உரை, நூ.3)

**“முதலில் கருவும் , கருவில் உரிப்பொருளும் சிறந்து வரும் ”** என்று நச்சினார்க்கினியரும் விளக்குவார்.

(தொல். அகத். நச். உரை, நூ.3)

என்னும் உரையாசிரியர்கள் தரும் விளக்கங்களால் திணை என்பது முப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டது என்பது புலனாகின்றது.

திணை எனும் சொல் குறித்து அறிஞர்கள் பலர் பல்வேறு கருத்துகளை உரைக்கின்றனர்.

**“தொல்காப்பியர் காலத்தில் திணை எனும் சொல் இலக்கியப்பொருள் என்னும் பொருண்மையில் வழங்கி வந்தது”என்பர். திண், திணி, திணை, நிலம் என்னும் அடிப்படையில் திணை என்னும் சொல் உருவானதாகக் கருதலாம்.**

(முனைவர் இராம பெரிய கருப்பன் (தமிழண்ணல்). சங்க இலக்கிய ஒப்பீடு, ப.7)

**“திணை என்ற சொல் ஒழுக்கத்தினைக் குறிக்கும் ”** என்று ந. சுப்புரெட்டியாரும் , (தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப. 34)

**“அகத்திலே நிகழும் இன்பத்தினையே அகத்திணை என்றனர். திணை ஒழுக்கம் அகத்திலே நிகழும் ஒழுக்கம் , புறத்திலே நிகழும் ஒழுக்கம் என இருவகைப்படும் ”** என்று சாமி. சிதம்பரனாரும் கருத்துரைக்கின்றனர். (தொல்காப்பியர் காலத் தமிழர் , ப. 31)

மேற்குறித்த கருத்துக்கள் வாயிலாக திணை என்பது ஒழுக்கம் என்பதும், அகவாழ்க்கையின் கூறுகளை எடுத்துரைக்க வல்லது என்பதும் பெறப்படுகிறது.

**குறிஞ்சி நில வாழ்வியல் சூழல்**

தொல்காப்பியர் குறிப்பிடும் நிலச் சூழலியல் முல்லை , குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பதாகும். மலையில் மனிதன் பழம் , காய்களை உண்டு , அருவி, சுனைநீரைப்பருகி, விலங்குகளின்று சற்று மாற்றம் பெற்றுப் பரிணாம அடிப்படையில் வாழ் ;ந்து வந்தான் என்பதைச் சங்க இலக்கியப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. தமிழர் சமூகம் வேட்டைச் சமூகமாகக் குறிஞ்சி நிலத்தில் தோன் ;றியது. உணவு , மற்றும் உறையுள் தேவைக்காக விலங்கினங்களை வேட்டையாட முற்பட்டான்.

**“மனிதன் இயற்கையின் பிள்ளை: அதன் மடியில் பிறந்து வளர்ந்தவன். எனவே இயற்கை, அவனுக்குள்ளும் குடி கொண்டிருக்கிறது என்றும் வாழ்வில் முன்னேற்றம் காண**

**விளைகின்றபோது மனிதன் இயற்கையோடு போரிட்டுப் போரிட்டே மனித நாகரிகம் வளர்ந்து வருகிறது. இப்போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது" என மா.இராமலிங்கம்**

(நாவல் இலக்கியம். ப. 118)

அவர்கள் கூறும் கருத்துப்படி மனிதன் தனக்குத் தேவை ஏற்படும்போது தன்னைச் சுற்றியுள்ள சூழலிலிருந்து தன் தேவையை நிறைவு செய்து கொள்ள விளைகிறான் என்பதும் , அவ்வாறு தோற்றம் கண்டதே நாகரிக வளர்ச்சி என்பதும் பெறப்படுகிறது.

இலக்கியங்களில் குறிஞ்சி நிலமானது உயர்ந்த மலைகளும் , மரங்களும் நிறைந்த பசுமை சூழலியலுடன் படைக்கப்பட்டுள்ளது. பசுமை வீற்றிக்கும் நில இடங்களில் நீர் வளமும் நிறைந்திருந்ததைக் காணமுடிகிறது. அருவி , சுனை, ஊற்று, காட்டாறு எனப் பல்வேறு வகைப்பட்ட நன்னீராதாரங்கள் மலைநிலத்தில் சித்தரிக்கப்படுகின்றன. உயிரியப் பன்முகத்தில் இடம்பெறும் சிறிய உயிர் முதல் பெரிய யானை வரையிலான அனைத்து உயிரினங்களும் , பறவைகளும் இன்புற்று இருத்தலைக் காணமுடிகிறது. இத்தகைய இயற்கைச் சூழலில் வாழக்கூடிய குறிஞ்சி நிலக்குறவர் இயற்கையோடு இயைந்து வாழ்கின்றனர். அவர்களுடைய அன்றாட வாழ்வில் நடைபெறக்கூடிய நிகழ்வுகளும் இலக்கியங்களாய் இடம் பெறுகின்றன.

குறிஞ்சி நில வாழிடச் சூழல்

ஆதிமனிதர் விலங்குகளிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள மரப்பொந்துகளிலும் , குகைகளிலும் வாழ்வு வாழ்ந்து வந்தனர். பின்னர் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு பல்வேறு வகையான குடியிருப்புகளை உருவாக்கினர். அக்குடியிருப்புகள்.

"**இலக்கியத்தில் இல், மனை, நகர், முன்றில். முற்றம். குரம்பை, மாடம், வகைப்பு குடில் கூறு என்று பல்வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன** " என அ. ஆறுமுகம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

(சங்க இலக்கியத்தில், குடும்பம். உடைமை, அரசு, ப. 28)

உடைமைச் சமுதாயம் ; உருவெடுத்தபோது மக்கள் வாழும் பகுதிகள் பல்வேறு பெயர்களால் அழைக்கப் பெற்றதையும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

மலை நாட்டில் வாழும் மக்கள் குறவர் எனப்படுவர். இதனை

"**குறவர் என்ற சொல் மலையில் வாழ்பவர் , காட்டிலே வாழ்பவர், பாம்பாட்டிகள், சாத்திரம் சொல்பவர் முதலியோரை இக்காலத்தில் குறிக்கும்" என சு. வித்தியானந்தன் அவர்கள்** ; பதிவு செய்துள்ளார்.

(தமிழர் சால்;பு. ப-206)

சங்ககாலத்தில் குறிஞ்சிநில மக்களைக் குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்தினர். இக்குறவர் வாழ்ந்த இடங்களில் சந்தனமிக்கக் காடுகளும் , புலி கரடி, யானை முதலான விலங்குகளும் , அழகான மயில் கூட்டங்களும் சுற்றித் திரிந்தனவாக அமைந்திருந்தன.

குறிஞ்சி நில மக்களின் வாழ்விடம் பல குடிசைகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. அவ்வாறு அமைந்த கிராமம் சிறுகுடி எனப்படும். இது குறிஞ்சி எனவும் சுட்டப்படும். பெரிய மலையிடத்து வீழும் அருவி பாறைகளின் வெடிப்புகளில் ஒலிக்கும் பல மலரையுடைய சாரலிலுள்ள சிறுகுடி என்றும் மேகங்கள் விளைவதற்கு இடமாகும் மலையைச் சேர்ந்த சிறுகுடி என்றும் ,

காந்தளையுடைய அழகிய சிறுகுடி என்றும் குறுந்தொகை குறிப்பிட்டுள்ளதை.

**"மால்வரை யிழிதரும் தூவெள் அருவி**
**கல்முகைத்ததும்பும் பல்மலா்;ச் சாரல்**
**சிறுகுடி......."** **(குறுந். 95)**
**"மழை விளையாடும் குன்றுசேர் சிறுகுடி"** **(மேலது. 108)**
**"வேங்கை கமழுமெஞ் சிறுகுடி"** **(மேலது. 355)**
**"காந்தளஞ் சிறுகுடி"** **(மேலது. 373)**

என்றும் அடிகளால் அறியலாம்.

இவ்வாறு குறிஞ்சி நில ஊர்கள் சிறுகுடி , வரை, குன்றில், வரைப்பு, குடில், கூரை எனப் பல பெயர்களால் சுட்டப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. மேலும் மலைவாழ் மக்கள் பகல், இரவு என்று தன் வேலைகளைப் பிரித்துக் கொள்வர். பகற்பொழுதில் தேன் எடுத்தல் , கிழங்குகளை அகழ்தல், உழவு செய்தல், தினை விதைத்தல் , தினை அறுத்தல் , தினை குற்றுதல் , வேட்டையாடுதல் போன்ற தொழில்களைச் செய்கின்றனர். உடல் சுமை கருதிப் பெண்கள் தினை காத்தல் , தினை குற்றுதல் , சமையல் செய்தல் , குழந்தை வளர்ப்பு போன்றவைகளைச் செய்கின்றனர். ஆண்கள் இரவில் தினைப்புனத்தைக் காத்தும் , வேட்டையாடியும் தங்கள் தொழில்களைச் செய்து வந்ததைக் குறுந்தொகைப் பாடல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

குறவர்கள் மான், முயல், உடும்பு, நரி, யானை போன்றவற்றை வேட்டையாடினர். வேட்டைப் பொருள்களைத் தம் இனக்குழுவுடன் சேர்ந்து பகுத்து உண்டனர். வேட்டைத் தொழில் தவிர மற்ற வேளையில் குறவர் தேன் எடுத்தலையும் , கிழங்கு அகழ்தலையும் பணியாகச் செய் ;துவந்தனர். குறவர்கள் கவலைக்கிழங்கை அகழ்ந்தெடுத்த செய்தியை,

**"கவலை கெண்டிய அகல்;வாய்ச் சிறுகுழி"** (குறுந். 233)

என்னும் பாடலடியால் அறியமுடிகிறது.

**தொழில்முறை**

குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களின தொழில்களாக ஏனல் காத்தல் , பூக்கொய்தல்,யானை பிடித்தல், கிளிகளைக் கடிதல், ஐவனம் விதைத்தல், கிழங்கு அகழ்தல், வேட்டையாடுதல் முதலியன அமைந்தன.

குறவர்கள் மலையில் கிடைத்த பழங்கள ,; காய்களை உண்போராக இருந் ;தனர். நீராதாரங்களுக்கு அருகில் அமைக்கப்பட்ட இடங்களில் பயிர் செய்யும் தொழிலை மேற்கொண்டு வந்தனர். இவர்கள் சோளம் , நெல், தினை போன்ற தானியங்களைப் பயிரிட்டனர். பயிரிடுதலுக்கு நிலத்தை உழுது பண்படுத்தினர். காடுகளை அழித்துப் புதிய புனங்களை உருவாக்கினர். காடு திருத்திப் பயிர் செய்வதை,

**"இன்றைய நவீன சமநில வேளாண்முறை தொடக்கத்தில் காட்டெரிப்பு வேளாண் முறையாக இருந்து வளர்ச்சி பெற்றது. இவ்வகை வேளாண்மையில் காட்டுப் பகுதியில் வாழும் பழங்குடியினர் அவர்களின் குடியிருப்புப் பகுதியில் ஓர் இடத்தைத் தேர்வு செய்து அங்குள்ள காட்டினை அழித்து வெட்டிய மரங்களைத் தீயிட்டுக் கொளுத்துவர். இவ் ;வாறு தயார்**

**செய்யப்படும் நிலத்தில் மூன்று முதல் ஐந்தாண்டுகள் பயிரிடுவர். அதன்பின் வேறொரு புதிய இடத்தைத் தேர்வு செய்து மீண்டும் பழையபடி காட்டை அழித்து அதனை எரித்து அங்குப் பயிரிடுவர் என குறிப்பிடுகிறார்.**

(சீ.பக்தவத்சல பாரதி, சங்க இலக்கியத்தில் நடைமுறை வாழ்க்கை,ப-23)

ஐவனம் என்னும் மலைநெல்லை விதைத்து , அருவி நீரைப் பாய்ச்சிச் சிறந்த பயிர்த்தொழிலை மலைநாடன் மேற்கொண்டான்; என்பதை,

**"மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி**

**அருவியின் விளைக்கும் நாடன்"** (குறுந். 371)

என்னும் அடிகள் காட்டுகின்றன.

**களைபறித்தல்**

குறவர்கள் மலையருவி பாயும் நிலத்திலே மலைநெல்லை விதைப்பர். அந்த நெற்பயிருக்கு இடையிலே களையாக முளைக்கும் மலை மல்லிகைக் கொடிகளையும் , கற்றாளைச் செடிகளையும் களைந்தெறிவார்கள் என்ற செய்தியை,

**"அருவிப் பரப்பி;ன் ஐவனம் வித்திப்**
**பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்டும்**
**காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பின்**
**கடுங்கண் வேழத்து………"** (மேலது.100)

என்னும் பாடலடிகளால் அறியலாம்.

மலைக்குறவர் பயிர் செய்ததில் தினைப்புனம் குறித்த செய்தி மிகுதியாக இடம்பெற்றுள்ளது. தினைப்புனக் காவலராக ஆண்களும் , பெண்களும் ஈடுபட்டிருந்தனர். மகளிர் 'குளிர்' என்னும் கருவிகளைக் கொண்டு தினையை உண்ணவரும் கிளிகளை விரட்டிக் காவல் புரிந்தனர் என்ற செய்தியை

**"பிடிக்கை அன்ன பெருங்குரல் ஏனல்**

**உண்கிளி கடியும் கொடிச்சிகைக்**குளிரே" (மேலது. 360)

என்னும் பாடலடிகள் காட்டுகின்றன..

பசிய தாள்களையுடைய தினைப் பயிரின் மணிகள் நிறைந்த பசிய கதிர்க் குலைகளைக் கொத்துகின்ற கிளிகளை ஓட்ட அவ்விடத்திற்குப் பெண்கள் சென்றனர் என்பதை

**"……..பைந்தாள் செந்தினை**

**மடப்பிடித் தடக்கை அன்ன பால்வார்பு**
**கரிக்குறட்டுஇறைஞ்சிய செறிகோட் பைங்குரல்**
**படுகிளி கடிகம் சேறும் அடுப்போ"** (மேலது.198)

என்னும் பாடல் சுட்டுகிறது.

தினைப்புனம் மேயவரும் விலங்குகளை விரட்ட ஆடவர்கள் இரவில் பரண் மீதிலிருந்து தீயை மூட்டிக் காவல் புரிந்தனர். இதனால் விலங்குகள் அத்தீயைக் கண்டு அஞ்சி ஓடின. இவ்வாறு குறவன் பரண் மீது அமர்ந்து சந்தனக் கட்டையை எரித்து நெருப்புப் புகை உண்டாக்கியதை,

"சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி" (மேலது.150)

பாடலடி மூலம் அறியமுடிகிறது.

மேலும் கானவன் தனது நிலத்தில் விளைந்த முற்றிய தினைக் கதிர் ;களை தெய்வத்திற்குப் ; பலியாகப் படைத்ததை,

**"புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்**
**கடியுண் கடவுட்கு இட்ட செழுங்குரல்" (மேலது.105)**
**என்னும் அடிகள் காட்டுகின்றன.**

இதன்மூலம் பயிரிடும் தொழில் ஆடவர் , பெண்டிர், இருவராலும் மேற்கொள்ளப் பெற்றதையும், தினைப்புனக் காவலில் மகளிர் பெரும்பங்கு வகித்தனர் என்பதையும் , தினைப் பயிர்;களைக் காக்கத் தெய்வத்திற்குப் பலியிட்டனர் என்பதையும் அறியமுடிகிறது.

**சூழலியல் சார்ந்த உணவு**

ஐவன நெல் , தினை, வரகு, மூங்கிலரிசி, கிழங்கு வகைகள் ,தேன், கனிகள் மற்றும் இயங்குயிர்களின் இறைச்சி என்பன மலைநில மக்களின் உணவாக அமைகின்றன. உணவுப்பழக்கம் என்பது பண்பாட்டு உணர்ச்சியின் ஒரு கூறாகக் கருதப்படுகின்றது. தமிழ் இலக்கியங்கள் இப்பண்பாட்டினை மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளன. இடத்திற்குத் தகுந்த , காலநிலைகளுக்குத் தகுந்த, சூழ்நிலைகளுக்கேற்பப் பல்வேறு உணவு வகைகள் பழந்தமிழரிடையே இருந்த நிலைகளை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. கறிக்கூட்டு வகைகளில் அசைவ உணவே பெருவழக்காக இருந்து வருகிறது. முட்டையுடன் கூடிய உடும்புப் பொரியல் , பன்றியின் கொழுப்புக்கறி , செம்மறியாட்டின் தொடைக்கறி , சுட்டமீன் வறுவல் ஆகியவை கறிக்கூட்டு வகைகளில் ; குறிப்பிடத்தக்கன.

**'கறியும் சோறும் கலந்த உணவு' ஊன் புழுக்கல் அல்லது ஊன்துவை' அடிசில் எனவும், உப்புக்கண்டம் 'வாடுஊன்' எனவும், குழம்புக்கறி 'கலவை' எனவும், ஊறுகாய் 'காடி'எனவும், கறியை வேக வைப்பதும் , சுடுவதும் வழக்கில் இருந்தன " என்று ஆ. இராமகிருட்டிணன் கூறுகிறார்.**

(அகமாந்தர்களும் கூற்றுகளும்,ப. 122.)

விலங்குகளுடன் போராடி வாழ்ந்த சூழலியல் குறிஞ்சி நில மக்களுக்குரியது. தலைவன் வேட்டையாடக் காட்டிற்குச் செல்கிறான். குறிஞ்சியில் களவு வாழ்க்கை இடம்பெறுகின்றது. வளமான மரங்களடர்ந்த சூழலில் தினைப்புனத்தைக் ; காக்க வரும் தலைவிக்குக் களவொழுக்கத்தைப் பின்பற்ற உறுதுணையாய் உள்ளது. குறிஞ்சி நிலத்தலைவன் தினைப்புனத்தைக் கடிய வரும் கிளிகளுக்கு நன்றி சொல்கிறான். இயற்கைச் சூழலியல் தலைவன் தலைவியரது காதல் வாழ்க்கைக்கு ஏற்றதாக உள்ளது.

இயற்கை பல நிலைகளில் மனிதனின் வாழ்க்கைக்குப் பயன்படுகின்றது. அது ஐவகை நிலங்களைத் தன்மையையும், மக்களின் மனப்பான்மையையும் பொறுத் ;தது. நிலச் சூழலியல் மனிதப் பிறவிக்கு அனைத்தையும் வழங்குகிறது. நாகரிகத்தின் தொடக்கமாக உள்ள குறிஞ்சிச் சூழலியல் மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்ததைக் கண்ணுற்றே புலவர்கள் அதனைப் பாடல்களில் படைத்துள்ளனர். குறிஞ்சிச் சூழலியல் மனிதர்களுக்கு இயங்குயிர்களின் இயல்புகளை உற்றுநோக்கும் வாய்ப்பை வழங்கியது.

சேயோனை வழிபட்டு வந்த குறிஞ்சி நில மக்கள் தம் நிலத்து வாழை , தினை, தேன், அவரை, பலாப்பழம் முதலியவற்றை உணவாக உட்கொண்டு வந்ததை குறுந்தொகைப்பாடல்கள்

வெளிப்படுத்தியுள்ளன.

வாழைக் குருத்தை உண்டு மயங்கிப் பித்தேறி நின்றது களிறு. அதனைக்கண்ட பெண்யானை அதனைக் காப்பது போலத் தலைவியும் தலைவன் மனைப்புகுந்த எந்நிலையில் இருந்தாலும் அவனைப் பேணி வழிபட வேண்டும் என்று எண்ணுகின்றதை,

**"மயங்கு துயர் உற்றமையால் வேழம்**

**உயங்கு உயிர் மடப்பிடி உலைப்புறம் தைவர"** (குறுந். 308)

என்னும் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

குறும்பூழ்' என்பது காடையைக் குறிப்பதாகும். சுவையுள்ள பறவைகளின் இறைச்சிகளில் குறும்பூழின் இறைச்சியும் ஒன்றாகும். நெய்யில் பொரித்த குறும்பூழின் இறைச்சியைச் சோற்றுடன் சேர்த்துண்பதை,

**"நெய்கனி குறும்பூழ் காயமாக**

**ஆர்பதம் பெறுக"** (மேலது. 389)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன.

**முடிவுரை**

- நிலவியற்கையைப் பொருத்து மக்களின் உணவும், தொழிலும் இன்னபிற செயல்பாடுகளும் மாறுவதை, இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.
- சூழலியலுக்கு ஏற்ப மனிதன் கூட்டமாக வாழக் கற்றுக் கொண்டான் என்றும், சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் பண்பினைப் பெற்றிருந்தனர் என்பதையும் குநற்தொகைப்பாடல்கள் வழி அறிய முடிகிறது.
- இயற்கைச் சூழலில் வாழக்கூடிய குறிஞ்சி நிலக்குறவர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். அவர்களுடைய அன்றாட வாழ்வில் நடைபெறக்கூடிய நிகழ்வுகளையும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.
- குறவர்கள் மான், முயல், உடும்பு, நரி, யானை போன்றவற்றை வேட்டையாடினர். வேட்டைப் பொருள்களைத் தம் இனக்குழுவுடன் சேர்ந்து பகுத்து உண்டனர்
- பயிரிடும் தொழில் ஆடவர், பெண்டிர், இருவராலும் மேற்கொள்ளப் பெற்றதையும், தினைப்புனக் காவலில் மகளிர் பெரும்பங்கு வகித்தனர் என்பதையும், தினைப் பயிர்;களைக் காக்கத் தெய்வத்திற்குப் பலியிட்டனர் என்பதையும் குநற்தொகைப்பபாடல்கள் எடுத்துரைத்துள்ளன.
- குறிஞ்சி நிலத்தில் பல்வகைப்பட்ட உயிரினங்கள் வாழ்ந்தமையும், குறவர்கள் இயற்கையோடு இணைந்தே தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர் என்பதையும், உணவு வகைகளைச் சமைத்து உண்டு வந்தனர் என்பதையும் இவ்வாய்வின்வழி அறிய முடிகிறது.